**அரசாங்க சேவை சேமலாப நிதியம் - 2018**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமான மற்றும் செலவினக்கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுடன் தொடர்புடைய கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், எனது அபிப்பிராயம் மறுப்பாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- நிதியத்தின் ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிதியம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிதியத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நியமம் 01 இன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக, நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டு தத்துவங்களினூடாக நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற பணங்கள், காசு அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 642,000,000 பெறுமதியுடைய முதலீடுகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டிற்குரிய வட்டி வருமானம் மற்றும் பிடித்துவைத்தல் வரியாக முறையே ரூபா 1,772,975 மற்றும் ரூபா 2,079,025 தொகைகள் குறைத்து மற்றும் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலையான சொத்துக்கள் மீது பெறவேண்டிய வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,852,000 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அவதானிப்பை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். | காலப்பகுதியுடன் தொடர்புடைய வட்டி வருமானம் துல்லியமாக கணிப்பிடப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவரப்படல் வேண்டும். |

### 1.5.4 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வரவு மற்றும் செலவு பதிவுகளுடன் தொடர்புடைய இனங்காணப்படாத மீதிகள் சீராக்கல் கணக்கிற்கு தீர்ப்பனவுகள் சரிப்படுத்தப்படும் வரை பல்வேறு அரசாங்க நிறுவகங்களினால் நிதியத்தில் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை மாதாந்த கணக்கு பொழிப்புக்களினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்தக் கணக்கின் வரவு மீதி ரூபா 29,448,892 ஆகக் காணப்பட்ட போதிலும், அவற்றுடன் தொடர்புடைய பிரகாரம் மீதி ரூபா 24,158,246 ஆகக் காணப்பட்டமையினால், ரூபா 5,290,646 வித்தியாசமொன்று அவதானிக்கப்படுகின்றது. | அவதானிப்பை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். | தொடர்புடைய நிறுவகங்களுடன் வருடாந்தம் தனித்தனியாக இணக்கங்களினை மேற்கொள்வதன் மூலம் சரியான கணக்குகளிலுள்ள சரிப்படுத்தப்பட்ட கணக்கின் மீதிகளினை கணக்கிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகளின் பற்றாக்குறை

| வகை | தொகை | கணக்காய்விற்கு கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கட்டாயமான பங்களிப்புக் கணக்கு, தற்காலிக பங்களிப்புக் கணக்கு, அரச பங்களிப்புக் கணக்கு | 62,071,934,809 | நிதியத்திற்கு பங்களிப்புச் செய்திருந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை | அரசாங்க சேவை நிதியத்திற்கு ஒவ்வொரு நிறுவகத்தினால் அனுப்பப்பட்ட பணத்தின் பெறுகைகள் 8 % மற்றும் 12 % ஆகப் பிரிப்பதன் மூலம் பணம் பெறுகைகளின் பதிவேட்டில் மற்றும் செலுத்துகைகளின் பதிவேட்டில் 8 % மற்றும் 12 % ஆகப் பதியப்பட்டது. கட்டாயமான பங்களிப்புக் கணக்கு, அரச பங்களிப்புக் கணக்கு மற்றும் தற்காலிக பங்களிப்புக் கணக்குகளின் மீதிகள் ஆண்டின் போது ஆண்டின் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்ட பெறுகைகளிலிருந்து செலுத்துகைகளினை கழித்து இலாபங்களின் ஒதுக்கீட்டினை சேர்ப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டிருந்தது. | நிதியத்திற்கு பங்களிப்புச்செய்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பான முறையான தரவுத் தளமொன்றைப் பேணுவதனூடாக மீதிகளின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய கணக்குகள்

சரிப்படுத்தல் கணக்கின் மீதியில், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டியலின் பிரகாரம், ரூபா 19,854,328, ரூபா 3,187,045, ரூபா 874,093 மற்றும் ரூபா 125,362 தொகைகள் 1 தொடக்கம் 3 வருடங்கள், 4 தொடக்கம் 6 வருடங்கள், 7 தொடக்கம் 10 வருடங்கள் மற்றும் 11 வருடங்களினை விடவும் பழைமை வாய்ந்த வீச்சினையுடைய மீதிகளாகக் காணப்பட்டன.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம் (621 ஆம் அதிகாரம்) | | | |
| (i) | 16(ஆ) மற்றும் 20(ஆ) பிரிவுகள் | பங்களிப்பாளரொருவர் வினைத்திறமையின்மை அல்லது துர்நடத்தைக்காக நீக்கப்பட்டால் அல்லது அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரிய அலுவலகமொன்றிற்கு நியமிக்கப்பட்டால் வட்டியுடன் அரசாங்க பங்களிப்பு உத்தியோகத்தரின் சார்பில் திரண்ட நிதிக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 313,813,696 தொகையான செலுத்தப்படாத வட்டியுடனான அரசாங்க பங்களிப்புக்களினை மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் 20 மற்றும் 16 ஆம் பிரிவுகளின் பிரகாரம், அவற்றிற்காக செலுத்த வேண்டியவற்றுடன் தொடர்புடைய அரசாங்க பங்களிப்புக்களுடனான வட்டி 2017 ஆம் ஆண்டு வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கின்றது. 2018 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு, 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்படாத அரசாங்க பங்களிப்புக்களுடனான வட்டியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் வெகு விரைவில், நிதியத்தில் காணப்படும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவர்க்கு செலவு | பொருத்தமான முறைமையொன்றை தயாரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சிக்கலான நிலைமையொன்று | கட்டளைச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்கப்பட்ட மீதி பங்களிப்பாளர்களை ஓய்வூதியங்கள் பணிப்பாளர் நாயகம் அறிவிப்பார். எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரணமாக அது தாமதமடைந்திருந்தது. அது தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2015 யூலை 23 இன் 07/2015 ஆம் இலக்க ஓய்வூதியங்கள் சுற்றறிக்கையின் 08 ஆம் பிரிவு | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பங்களிப்புக்கள் மாதாந்த கணக்குப் பொழிப்புகளினூடாக செலவுவைக்கக்படக் கூடாது. எவ்வாறாயினும், 13 நிறுவகங்களிடமிருந்து ரூபா 50,353,743 பங்களிப்புக்கள் 2018 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினூடாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். | சுற்றறிக்கை பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,642,414,331 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,779,940,754 மிகையொன்றை விளைவித்திருந்தமையினால், நிதிசார் விளைவில் ரூபா 1,137,526,423 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 1,189,752,778 இனால் அதிகரித்தமை அதற்கான பிரதான காரணமாகக் காணப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் பங்களிப்புக்களாக நிறுவகங்களினால் ஓய்வூதியங்கள் | தபால் மூலம் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பல்வேறு நிறுவனங்களினால் காசோலைகள் | பெறப்பட்ட வருமானத்தை விரைவாகவும் சாத்தியமான வகையில் தேறுகை செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் தபால் கிளையிலிருந்து அரசாங்க சேவை சேமலாப நிதிய கிளைக்கு அனுப்பப்படும் காசோலைகளினை கையளிப்பதில் 01 மாதம் தொடக்கம் 14 மாதங்கள் வரையான வீச்சில் தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | அனுப்பப்படுகின்றதுடன் காசோலைத் திகதி மற்றும் சேமலாப நிதிய அலுவலகத்தின் காசோலை பெறுகைகளின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட திகதிகளுக்கிடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் இடைவெளிகள் அவதானிக்கப்படுகின்றன. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஆகையினால், தபால் கிளையில் பெறப்பட்ட பின்னர் உடனடியாக அரசாங்க சேவை சேமலாப நிதிய கிளைக்கு காசோலைகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற காசோலைகளினை விரைவாக சாத்தியமான வகையில் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானத்தை தேறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 8 நாட்கள் தொடக்கம் 1 ½ மாதங்கள் வரையான வீச்சினையுடைய தாமதமொன்றுடன் வங்கியிலிடப்பட்டிருந்தது. | காசோலைகளின் அனுப்புகை தொடர்பில் 07/2015 ஓய்வூதியங்கள் சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் அறவிடப்பட்ட அரசாங்க சேவை நிதியத்தின் நிதிகள் பின்தொடர்ந்துவரும் மாதத்தின் 10 ஆவது நாளுக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டுமென மேலும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. | பெறப்பட்ட வருமானத்தை விரைவாகவும் சாத்தியமான வகையில் தேறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 செப்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம், ரூபா 1,989,639 பெறுமதியுடைய 43 காசோலைகள் 2018 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் திருப்பியனுப்பப்பட்டது. ஆனால் மீண்டும் பங்களிப்புக்கள் அனுப்பப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறான நிலைமையொன்றை தவிர்ப்பதற்காக, கிளையில் அவற்றை பெற்ற பின்னர் உடனடியாக வங்கிக்கு காசோலைகளினை அனுப்புவது தொடர்பில் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். | காசோலைகளினை விரைவாகவும் சாத்தயமான வகையில் வங்கியிலிடுவதற்கு மற்றும் திருப்பியனுப்பப்பட்ட காசோலைகளுக்காக பங்களிப்புக்களினை மீள அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஓய்வூதியத்திற்கு உரித்தில்லாது சில பொதுத்துறை ஊழியர்களுக்கு நலன்களினை அளிக்கும் நோக்கத்துடன் அரசாங்க சேவை சேமலாப நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2018 சனவரி 01 இல் | மீதமாகவுள்ள 592 விண்ணப்பங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பூர்த்தியாக்கப்படாத விண்ணப்பங்கள் பற்றி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றதுடன் அந்த குறைபாடுகள் கிளைக்கு பெறப்படும் வரை | நிறுவகங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களில் காணப்படும் குறைபாடுகளினை இழிவளவாக்குவதற்கு அறிவுறுத்தல்களினை வழங்குவதற்கும் அதன் மூலம், தாமதமின்றி |

உள்ளவாறு 954 செலுத்தப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கையொன்று காணப்பட்டதுடன் நிதியத்தின் உறுப்பினர்களினால் நலன்களினைப் பெற்றுக் கொள்வதற்காக ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3,555 ஆகக் குறிப்பிடப்பட்டது. அவற்றில், 592 விண்ணப்பங்களுக்காக செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத அதேவேளை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 3,917 விண்ணப்பங்களுக்காக ரூபா 354,979,757 செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

செலுத்துகைகள் மேற்கொள்ள முடியாத விண்ணப்பங்களும் காணப்பட்டன. ஆகையினால், நலன்களினைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அனைத்து விண்ணப்பங்களுக்காகவும் ஒரே தடைவயில் செலுத்துகைகளினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

விண்ணப்பங்களுக்கான செலுத்துகைகளினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளினை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.